**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 50 of 2020**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : அம்பிகா** | **Father/Husband's Name : ஜெயராஜ்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.08.2025.**

**Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது நேதாஜி நகரில் குடியிருந்து வீட்டை கவனித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 21.04.2019 ம் வருடம் மதியம் 1.00 மணியளவில் நான் மளிகை கடைக்கு சென்றுவிட்டு எனது வீட்டிற்கு வருவதற்கு முன்பு 100 அடியில் இரண்டு நபர்கள் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். எனது கழுத்தில் இருந்த 4 பவுன் செயினை அத்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். நான் கீழே விழுந்துவிட்டேன். நான் சத்தம் போட்ட பிறகு வார்டு கவுன்சிலர் ராஜவேலு என்னை தூக்கி தண்ணீர் கொடுத்தார். எதிரி என்னை பின் பக்கத்தில் இருந்து அத்துக்கொண்டு சென்றதால் நான் முன் பக்கம் கீழே விழுந்துவிட்டதால் அவர்களை அடையாளம் பார்க்க முடியவில்லை. எனது மகள் அமுதாவிற்கு தகவல் சொல்லிவிட்டு அவர்கள் வந்தபிறகு பழனி நகர் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** ஆஜர் எதிரி தான் செயினை அத்துச் சென்றாரா என்று தெரியவில்லை, ஏனென்றால் நான் முன்பக்கம் விழுந்துவிட்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள நகை என்னுடையதுதான். நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது நகையை 3 பவுன் செயினை இடைக்காலமாக பெற்று சென்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள செயின் தான் நான் வாங்கி சென்றேன். செயின் உள்ள **புகைப்படம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்குவிசாரணை</u>**

**2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2025.08.13 17:15:10 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 50 of 2020**

**Deposition of Witness P.W.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ராஜவேலு** | **Father/Husband's Name : சங்கரன்** | |
| **Village** | **:** | **Taluk** | **:** |
| **Caste** | **:** | **Calling** | **:** |
| **Religion :** | | **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 13.08.2025.**

**Accused present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது நேதாஜி நகரில் குடியிருந்து சிவில் இன்ஜினியராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அம்பிகா எனக்கு தெரியும். பல வருடங்கள் ஆனதால் ஆஜர் எதிரியை எனக்கு ஞாபகமில்லை. கடந்த 21.04.2019 ம் தேதி மதியம் சுமார் 1.00 மணியளவில் அ.சா.1–ன் செயினை அடையாளம் தெரியாத நபர்கள் அத்துசென்றுவிட்டதாக என்னிடம் சொன்னார். மேற்படி சம்பவத்தை நான் கேள்விபட்டேன். பின்னர் நான் அவரது மகளுக்கு தகவல் சொன்னேன். அவர் மகள் வந்து அவரை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

2. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2025.08.13 17:15:17 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி.